2025 – மார்ச் மாதம் 06– ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 174/2019*

*2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 06– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW2, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 2, K. ரவிச்சந்திரன் |
| தகப்பனார் பெயர் | : | கருப்பன் செட்டியார் |
| ஊர் | : | மேலூர் |
| வட்டம் | : | மேலூர் |
| மாவட்டம் | : | மதுரை |
| தொழில் | : | வழக்கறிஞர் |
| வயது | : | 62 |

<u>தேதி: 06.03.2025.</u>

<u>முதல் விசாரணை:–</u>

நான் மதுரை, மேலூரில் குடியிருந்து வழக்கறிஞராக தொழில் செய்து வருகின்றேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கடந்த 22.06.2016 அன்று எனது வாகனம் T N 59 Q 5511 என்ற டிராக்டர் வாகனம் விபத்து ஏற்படுத்தியதாக மனுதாரர் என்னை 1–ம் எதிர்மனுதாரராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு சம்மனைப்பெற்ற பிறகு எனது வாகனத்தை நான் கடந்த 08.08.2011 அன்று திரு. அதிவீரன் த/பெ. சுப்பையா, கொண்டநாயக்கன் கோட்டை தெரு, சித்தைய்யன் கோட்டை, செம்பட்டி தாலுக்கா, திண்டுக்கல் மாவட்டம், என்ற நபருக்கு விற்பனை செய்துவிட்டேன். அவ்வாறு அதிவீரன் என்பவர் வாகனத்தை விற்பனைக்கு டெலிவிரி எடுத்துக்கொண்டதற்கு எனக்கு வழங்கிய கடிதம் அசல் **எ.சா.ஆ.5** ஆகும். மேற்படி விபத்து தேதியில் மேற்கண்ட ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கில் 1–ம் எதிர்மனுதாரர் அதிவீரன் என்பவரே ஆவார். மேற்படி விபத்து தேதியில் மேற்கண்ட வாகனத்திற்கு நான் உரிமையாளர் இல்லையென்பதால் என்னைப்பொறுத்து மனுதாரரின் மனுவை தள்ளுபடி

செய்ய வேண்டி பிரார்த்திக்கின்றேன். மனுதாரருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று மேற்கண்ட வாகனத்தை என்னிடம் இருந்து பெற்றுக்கொண்ட அதிவீரன் என்பவரே வழக்கில் 1–ம் எதிர்மனுதாரராக சேர்த்து வழக்கை மேல் நடத்தி அவர் மீது நஷ்டஈடு பரிகாரம் கோரி தாக்கல் செய்து கொள்ள வேண்டியதாகும். என்னிடம் இருந்து வாகனத்தை அதிவீரன் என்பவர் வாங்கிக்கொண்ட பிறகு தன் பெயருக்கு வாகனத்தின் பதிவுச்சான்று மாற்றிக்கொள்ளாதது சட்டப்படி தவறானதாகும். மேற்படி வாகனத்தின் பதிவுச்சான்றை தன் பெயருக்கு மாற்றாமல் வைத்துக்கொண்டும், ஓட்டுநர் உரிமம் மற்றும் விபத்து காலத்தில் வாகனத்தின் தகுதிச்சான்று ஆகியவை இல்லாமல் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தி விட்டு இந்த வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மேற்படி வாகனத்தின் பதிவுச்சான்றை தன் பெயருக்கு மாற்றாமல் என் பெயரிலேயே வைத்துள்ளார். அதனால் விபத்து காலத்தில் மேற்படி வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் மற்றும் தகுதிச்சான்று ஆகியவை இல்லாமல் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியது என்னை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது. விபத்திற்கான முழு பொறுப்பும் வாகனத்தை என்னிடம் இருந்து வாங்கிய நபரைச்சார்ந்ததாகும்.

<u>குறுக்கு விசாரணை (மனுதாரர் தரப்பில்):–</u>

இவ்வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து எனக்கு முதலில் அழைப்பாணை வந்த போது ஏன் அந்த அழைப்பாணையை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகவில்லையென்றால் என் பெயரில் உள்ள வாகனத்தை நான் விற்ற நபரிடம் வழக்கு குறித்து தெரிவித்து விட்டேன் அவர் வழக்கை மேல் நடத்திக்கொள்வதாக என்னிடம் உறுதி அளித்ததன் பேரில் நான் நீதிமன்றத்தில் ஆஜராகினேன். தற்போது நான் ஏன் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் என்னிடம் விபத்திற்குட்பட்ட வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் மற்றும் தகுதிச்சான்று ஆகியவை இல்லையென்ற காரணத்தினால் எனக்கு எதிராக நீதிமன்றத்தில் உத்தரவு

பிறப்பிக்கப்பட்டு விடும் என்று கருதி உண்மையை தெரிவிப்பதற்காக இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கின்றேன்.

**மறு விசாரணை:–இல்லை.**

**ஒப்பம் /– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**